**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.204/2019</u>** **தேதி.**10.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 10.02.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.பானுமதி |
| க/பெ. | திரு.ரமேஷ் |
| வயது | 50/2026 |

துவக்க நேரம் 1.25 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சூ கம்பெனியில் வேலை செய்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் கிரைய உடன்படிக்கையில்(வா.த.சா.ஆ.1) உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் நான் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளவர்கள் யார் என்றால் எனது கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்.

2. எனது கணவர் எங்கு வேலை செய்கிறார் என்றால் அவரும் லெதர் கம்பெனியில்தான் வேலை செய்கிறார். இந்த கிரைய உடன்படிக்கையை எழுதிக்கொடுக்கும்பொழுது என்னுடைய அசல் பத்திரத்தையும் நான், வாதியிடன் ஒப்படைத்துவிட்டேன் என்றால் முன்கூட்டியே கொடுத்துவிட்டேன், கொஞ்சம் காசும் வாங்கிவிட்டேன்.

3. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு, வாதி தரப்பில் இருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அந்த

அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் இருந்த சமாச்சாரங்கள் உண்மை என்பதால்தான் நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

4. என்னை கட்டாயப்படுத்தியும், மிரட்டியும் கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்தவில்லை என்றாலும், நானும் எனது கணவரும் நேரடியாக சென்றுதான் இந்த கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொடுத்தோம் என்றால் ஆமாம். காலி மனையை ரூ.3,00,000/–க்கு விற்பதாக வாதியிடம் சொல்லிதான் ரூ.2,75,000/–யை முன்தொகையாக பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை, நான் ரூ.2,00,000/–தான் பெற்றேன். நான் பெற்றுக்கொண்ட முன்தொகைக்கும், மீதி உள்ள தொகைக்கும் இந்த கிரைய உடன்டிப்கையை ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தற்பொழுது வழக்கிற்காக வேண்டி கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றும், அடமான பத்திரம்தான் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

முடிவு நேரம் 1.35 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.